**வரையறுத்த கும்பல்கமுவ மினி ஹைட்ரோ (தனியார்) கம்பனி – 2021**

---

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுத்த கும்பல்கமுவ மினி ஹைட்ரோ (தனியார்) கம்பனியின் “(கம்பனி” ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிரத்து கம்பனி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனி நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்காக கணக்காய்வாளரின் பொறுப்புகள்)

-----------------------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கம்பனி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கம்பனியானது 2015 பெப்ரவரி 18 இலிருந்து 20 ஆண்டு காலப் பகுதிகளிற்காக சொந்த கட்டிடம் கட்டும் நோக்கத்திற்காகவும் மினி கைட்றோபவர் பொறி செயற் படுவதற்காகவும் காணியொன்றின் குத்தகைக்கு வனவள பாதுகாப்பு திணைக்களத்துடன் உடன்படிக்கை | மின்சக்தி பொறி மற்றும் மின்சக்தி பொறியின் வனவள திணைக்களத்திற்கும் இடையிலான உடன்படிக்கை செயற்பாட்டு குத்தகையாக இனங்காணப்பட்டது செலுத்த வேண்டிய வருடாந்த கட்டணம் தெளிவாக இனங்காணப்பட்டிருந்தது. | கணக்கீட்டு நியமத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| கைச்சாத்திடப்பட்டிருந்தது. ரூபா 4,436,705 ஆன வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணம் உடன்படிக்கைப் பிரகாரம் வனவள திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், SLFRS – 16 – குத்தகைகள் பிரகாரம், அனுமதிப்பத்திர கட்டணம், குத்தகைகள் அனுமதிக்கப்பட வேண்டியதுடன் குத்தகைகள் பொறுப்பு சொத்துக்களின் பயன்பாட்டு உரிமைகள் கணக்குக்கிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.5.2 முறையற்ற மதிப்பாய்வு அல்லது மதிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வனவளத் திணைக்களத்தால் 2019 இல் ஒரு பேர்ச் ரூபா 5,000 முதல் ரூபா 5,750 வருடாந்த கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியானது திருத்தங்களுடன் இணங்கியிருக்காததுடன் இதன் விளைவால் மீளாய்வாண்டின் வருடாந்த கட்டணம் ரூபா 578,700 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 4,166,645.40 (ஒவ்வொன்றும் 771.601 X ரூபா 5,000.00 + வற் (8%)) வருடாந்த கட்டணம் 2018 பெப்ரவரி 16 இன் வனவள திணைக்கத்துடனான உடன்படிக்கை பிரகாரம், நிதிக் கூற்றுக்களிற்கு கதியப்பட்டிருந்து, வரையப்பட்ட பயிற்சி மற்றும் இறுதி உடன்படிக்கை 2022 சனவரி 10 இல் வந்தது. | திருத்திய சேவைக் கட்டணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1978 இன் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் பதியப்பட்ட உடன்படிக்கை | (i) கம்பனியானது உடன்படிக்கையின் பகுதி I(2)(i) இற்கமைய இணங்குவதில் 2017 இலிருந்து வருடாந்த கட்டணம் செலுத்தப் பட்டிருக்கவில்லை. மேலும், உடன் படிக்கையின் பகுதி I(2)(ii) இற்கமைய அவற்றின் மீது வருடாந்த கட்டணம் மற்றும் / அல்லது வட்டி அல்லது ஏதாவது பகுதி நிலுவையாக வந்த | வேண்டப்பட்டவற்றை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொடுப்பனவு திட்டத்தின் கீழான கொடுப்பனவுகள் தீர்ப்பனவு தொடர்பின் BOI பணிப்பாளர்களுடன் (அறவீடுகள்) கலந்துரையால் பூர்த்தியாக்கப்பட் டதுடன் மேற்குறித்த கூட்டங்களின் | உடன்படிக்கையுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பின்னர் அவை கோரப்பட்டோ அல்லது கோரப்படாமலோ ஆறு மாத காலப்பகுதிக்காக செலுத்தப்படாது இருந்தது. சொல்லப்பட்ட நிபந்தனைகள் மற்றும் கட்டளைகள் மீறப்படும் போது எழுகின்ற பொது முயற்சிகளிற்கு எதிராக சபையால் ஏதாவது கோரப்படுவதற்கு முற்கோள் அல்லாமல் ஆறு மாதங்கள் கடந்த பின்னர் உடன்படிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். எனவே, வருடாந்த கட்டணங்கள் செலுத்தாமைால் BOI உடன்படிக்கை நிறுத்த முடியும். இதன் விளைவால், கம்பனி BOI உடன்படிக்கைின் கீழ் ஏற்கனவே பெறப்பட்ட வரிச் சலுகைகளை திருப்பிச் செலுத்த வேண்யடிருந்தது. | ஆலோசனை பிரகாரம் ஆரம்ப கட்டமாக BOI இற்கு ரூபா 1 மில்லியன் கொடுப்பனவு விடுவிக்கப்பட்டதுடன் மிகுதி கொடுப்பனவு பகுதி பகுதியாக தீர்ப்பனவு செய்யப்படும். | |
| (ii) | உடன்படிக்கையின் பந்தி I(14)(ஆ) இன் பிரகாம், நிதியாண்டு முடிவடைந்து ஆறு மாதங்களிற்குள் பொது முயற்சிகள் நிதி ஆண்டின் போது வரி இலவசம் என்ற அடிப்படையில் பொது முயற்சிகளால் இறக்குமதி செய்யப் பட்டவற்றிற்கு மூலதன பொருட்கள் மீது மேற் கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வு அறிக்கை குறிப்பிடுபவை உள்ளடங்கலாக கணக்குகள் மற்றும் புள்ளி விபங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் கம்பனியானது அந்த வேண்டுகையுடன் இணங்கியிக்கவில்லை. | BOI உடன் உடன்பட்டவாறு அடுத்த ஆண்டிலிருந்து வேண்டுகை பூர்த்தி செய்யப்படும் | உடன்படிக்கையுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மினி கைட்றோ பொறி நிர்மாணிப்பதற்கும் செயற் படுத்துவதற்கும் வன வள கட்டளையின் கீழ் வன வளத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட பல்வேறு அனுமதிப்பத்திரங்கள் | மினி கைட்றோ பொறி செயற்படுத்துவதற்கும் வருடாந்த அனுமதிப் பத்திர கட்டணங்கள் செலுத்த வேண்டும். எவ்வாறாயினும், 2017 இலிருந்து அனுமதிப் பத்திரத்தை புதுப்பிப்பதற்கு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19,598,665 ஆன தொகை வனவள திணைக்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | அனுமதிப் பத்திர இறுதி தொகை 2022 சனவரி 10 இல் இறுதிாக்கப்பட்டது. எவ்வாறாயினும், பெறப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம், கம்பனியானது பின்னர் தீர்ப்பனவு செய்யும் செயற்பாட்டில் உள்ளது. | நிலுவைாகவுள்ள வருடாந்த அனுமதிப் பத்திர கட்டணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 38,979,739 தொகையான இலாபமானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 32,250,486 தொகையாகும். ஆகவே, நிதி விளைவுகளில் ரூபா 6,729,253 தொகையான முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டின் போது வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்தமையால் நிதிச் செலவினம் குறைவடைந்தமையே அந்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாகும்.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் பகுப்பாய்வானது அதிகரிக்கின்ற அல்லது குறைகின்ற சதவீதத்துடன் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் இத்தலைப்பின் கீழ் காட்டப்பட வேண்டும்.

| வருமானம் / செலவினம் | 2021 | 2020 | அதிகரிப்பு) / (வீழ்ச்சி) | சதவீதம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா. | % |
| வருமானங்கள் | 116,107,930 | 115,197,323 | 910,607 | 0.8 |
| விற்பனைக் கிரயம் | 42,502,230 | 38,462,919 | 4,039,311 | 10.5 |
| நிர்வாகச் செலவினம் | 8,058,091 | 7,545,142 | 512,949 | 6.8 |
| நிதிச் செலவினம் | 26,622,950 | 37,017,883 | (10,394,933) | 28 |

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைக்கமைய நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் | 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப் பட்டிருந்ததுடன் 2022 பெப்ரவரி | சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரைவு செயலாற்றல் அறிக்கையுடன் சேர்த்து அனுமதிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டும். எவ்வாறாயினும், 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2022 ஏப்ரல் 05 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 23 நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது | |

### 3.2 வருடாந்த அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 இலிருந்து வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை. | 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு மேற்படி செயற்பாட்டிற்கு மின்சக்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்கியொழுக வேண்டும். |
| (ஆ) | கம்பனியானது 2021 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டம் இறுதியாக்கல் செயற்பாட்டில் உள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான பாதீடு ஏற்கனவே பூர்த்தி யாக்கப்பட்டிருந்ததுடன் உடமையான கம்பனியின் BOD ஆல் அனுமதிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |

### 3.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சகல நிறுவனங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மீது ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சி" நிரல் பிரகாரம், அதன் நோக்கெல்லையின் கீழ் இலக்குகள் மற்றும் செயற்பாடுகளின் அமுலாக்கலில் பங்களிப்பு செய்ய வேண்டும். ஆனால், அடைய வேண்டிய உரிய நோக்கங்கள் மற்றும் இலக்குகள், அந்த நோக்கங்கள் அடைவதிலுள்ள இடைவெளி அதேபோல முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் என்பன இனங்காணப் பட்டிருக்கவில்லை. | சிறந்த நடைமுறை பின்பற்றப்படுவதுடன் SDG இலக்குகள் இனங்காணப்படும். | கம்பனி நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (SDG) மீது ஐக்கிய நாடுகளின் "2030 நிகழ்ச்சி" நிரலுடன் இனங்கி யொழுக வேண்டும். |